# தங்கம் வென்ற ‘சங்கே முழங்கு’

# பிளாட்டினம் வென்ற ‘சாதனா’ திட்டம்




சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக மாணவர்களையும் மாணவர் மன்றங்களையும் அங்கீகரிக்கும் விதத்தில் நடைபெற்ற விருது நிகழ்ச்சியில் ‘சங்கே முழங்கு’ நிகழ்ச்சிக்கு தங்க விருதையும் ‘சாதனா’ துணைப்பாட வகுப்புகளுக்காக பிளாட்டின விருதையும் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவையின் 36வது செயற்குழு உறுப்பினர்கள் பெற்றுக்கொண்டனர். **படம்: சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம்**

விஜயகுமார் அருள் ஒஸ்வின்
சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம்

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக மாணவர்களையும் மாணவ மன்றங்களையும் அங்கீகரிக்கும் மாணவர் சாதனையாளர் விருது விழா 2016ல் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை மீண்டும் பல விருதுகளை வென்று சாதனை படைத்துள்ளது.

சென்ற மாதம் 29ஆம் தேதியன்று பல்கலைக்கழக கலாசார மையத்தில் 11வது முறையாக நடைபெற்ற இந்த விழாவில் தமிழ்ப் பேரவையின் 36வது செயற்குழுவுக்கு மூன்று விருதுகள் வழங்கப்பட்டன.

சமூக சேவை, கலை, கலாசாரம், புது முயற்சி, போட்டி, தலைமைத்துவம், பல்கலைக்கழகத் துடிப்புமிக்க மன்றம் என்று மொத்தம் ஆறு பிரிவுகளில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல விருதுகள் வழங்கப்பட்டன.

சென்ற ஆண்டு பல்கலைக்கழக கலாசார மைய அரங்கில் 3,000 பேர் முன்னிலையில் அரங்கேறிய ‘சங்கே முழங்கு’ மேடை நாடகம், கலை, கலாசாரப் பிரிவின் தங்க விருதைத் தட்டிச்சென்றது.

“மற்ற இனத்தவர்களும் சங்கே முழங்கு நாடகத்தின் சிறப்பை உணர்ந்தனர். இந்த விருதை எங்களுக்கு வழங்கியுள்ளது பெருமையாக இருக்கிறது,” என்றார் சங்கே முழங்கின் தயாரிப்பாளரான ஜெய்ஸ்ரீ, 23.

ஆண்டுதோறும் தொடர்ச்சியாக மூன்று முறை தங்க விருது பெறுவோரைக் கௌரவிக்கும் வண்ணம் ஆக உயரிய விருதான பிளாட்டினம் விருதை ஏற்பாட்டாளர்கள் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தினர்.

சிண்டா, சிங்கப்பூர் இந்தியர் கல்வி அறக்கட்டளையின் நிதி உதவியுடன் தமிழ்ப் பேரவை நடத்தி வரும் ‘சாதனா’ துணைப்பாட வகுப்புத் திட்டம் சமூக சேவை பிரிவில் மூன்றாவது முறையாகத் தங்க விருதைப் பெற்று மாணவர் சாதனையாளர் விருதின் முதலாவது பிளாட்டின விருதை வென்றது.

“கடந்த 32 ஆண்டுகளாக, தற்போதைய, முன்னாள் மாணவர்களின் உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரம் இது. தரமான கல்வியைக் குறைந்த கட்டணத்தில் வழங்கச் சாதனா என்றும் பாடுபடும்,” என்றார் இவ்விருதை வென்ற ‘சாதனா’ குழு உறுப்பினர் சசீதரன், 23.

“இன்றைய இளையர்கள் முழுமனதுடன் களத்தில் இறங்கினால் எதையும் சாதிக்கலாம் என்பதை இந்த விருதுகள் உணர்த்துகின்றன. ஆற்றலும் திறமையும் மிக்க 36வது செயற்குழுவை வழிநடத்தியதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி,” என்றார் 36வது தமிழ்ப் பேரவையின் தலைவர் ம.கணேஷ் குமார், 23.

இந்த விருது விழாவில் பல்கலைக்கழகத்தின் துடிப்புமிக்க மன்றத்துக்கான விருதையும் பெற்ற தேசிய பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை, தமிழின் மேம்பாட்டுக்காகவும் சமூகத்துக்காகவும் தொடர்ந்து உழைக்க முனைப்புடன் உள்ளது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.